# 2 இளவேனில்



முத்தம் கொடுப்பவளே - கொடி
முந்திரி பூத்ததுபார்
அத்தி மரக்கிளையின் - தளிர்
ஆடும் அழகினைப்பார்
குத்தும் மலையருகே - புறா
கூவிக் குலவுதுபார்
தொத்தும் பசுங்கிளியை -மயில்
தூது விடுவதைப்பார்!

ஒத்த மனத்தினளே - குளிர்
ஓடை முடிவொலி போல்
சத்தம் கொடுக்குதடி - மலை
சந்தனம் சிந்துதடி
முத்துச்சிரிப்பழகி - மலர்
மூச்சு மணக்குதடி
கத்தரி காய்க்குதடி!

சங்கத் தமிழ்மதுரை - நகர்
தாண்டித்தவழ்ந்து வரும்
மங்கலத் தென்றலிலே - கரு
வண்டு மயங்குதடி
பொங்கி வழிந்திடுந்தேன் -அது
பூக்களின் வேர்வையடி - இது
வேனில் பருவமடி!

பொறிபொறியாய்மலரைப் - பசும்
புன்னை மரத்தினில்பார்
கரிகரியாய்நிழலை - அதன்
காலடி சுற்றிலும் பார்.
வரிவரியாயலையை - முழு
வட்டக் குளத்தினில் பார்
சரிசரி என்பவளே - சுவை
தரவரு வாய்மயிலே!

ஊட்டி வளர்ப்பவளே - உயிர்
ஓவியம் போன்றவளே
ஏட்டின் கவிதையைப் போல் - நகர்
எங்கும் புதுமையடி
காட்டுப் பறவையெல்லாம் - தமிழ்க்
காதல் புரியுதடி
வாட்டம் தவிர்த்திடடி - எனை
வந்து தழுவிடடி!

**உவமைக் கவிஞர் - சுரதா**

## அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| தொத்தும் | - | தாவி ஏறிக் கொள்ளல் |
| கத்தரி கோடை<br>வெங்கனல் கோடை | } | கடும் வெயில் |
| வாட்டம் | - | சோர்வு |

## கிரகித்தல் பயிற்சி

*1.* *இக்கவிதையில் வருகின்ற தாவரங்களை அட்டவணைப்படுத்துக.*

*2.* *கருவண்டு ஏன் மயங்குகிறது?*

*3.* *இக்கவிதையில் இடம் பெறுகின்ற உவமையணிகள் எவை?*

*4.* *இக்கவிதையில் இடம் பெற்றுள்ள ஓசைநயத்தை எடுத்துக் காட்டுக.*

*5.* *"காட்டுப் பறவையெல்லாம் தமிழ்க் காதல் புரியுதடி" என்ற வரியில் கவிஞர் உணர்த்த விரும்புவது என்ன?*

*6.* *இக்கவிதையில் உங்களுக்குப் பிடித்தமான வரியினைக் குறிப்பிட்டு, அதற்கான காரணங்களைத் தருக.*

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

1. இளவேனில் கவிதையை மனனம் செய்து உணர்வு பூர்வமாகப் பாடிக் காட்டுக.
2. கவிஞர் சுரதாவின் உவமைமிக்க கவிதைகளைச் சேகரித்து வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
3. வெண்கட்டி எனும் தொனிப் பொருளில் நீங்கள் ஒரு கவிதையை எழுதுங்கள்.
4. உங்களது நண்பர்களுடன் இணைந்து உங்கள் பிரதேசத்தின் "இயற்கையெழிலைக்" கவிதை வடிவில் எழுதுக.

## மொழி வளம்

### எதிர்ச்சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசட்டுத்தனம் | - | சாமர்த்தியம் |
| 2. | அசல் | - | நகல் |
| 3. | அச்சம் | - | தைரியம் |
| 4. | அடர்த்தி | - | ஐது |
| 5. | அமிலம் | - | காரம் |
| 6. | அழுகை | - | சிரிப்பு |
| 7. | அவசரம் | - | நிதானம் |
| 8. | அடக்கம் | - | ஆவணம் |
| 9. | அனுகூலம் | - | பிரதிகூலம் |
| 10. | அந்நியர் | - | உறவினர் |
| 11. | ஆக்கல் | - | அழித்தல் |
| 12. | ஆசை | - | நிராசை |
| 13. | ஆரம்பம் | - | முடிவு |
| 14. | ஆவேசம் | - | சாந்தம் |
| 15. | ஆரோகணம் | - | அவரோகணம் |
| 16. | இகம் | - | பரம் |
| 17. | இடம் | - | வலம் |
| 18. | இயற்சொல் | - | திரிசொல் |
| 19. | இலட்சணம் | - | அவலட்சணம் |

| | | | |
|---|---|---|---|
| 20. | இல்லறம் | - | துறவறம் |
| 21. | ஈடேற்றம் | - | உய்வின்மை |
| 22. | உடன்பாடு | - | எதிர்மறை |
| 23. | உதயம் | - | அஸ்தமனம் |
| 24. | உபகாரம் | - | அபகாரம் |
| 25. | உறக்கம் | - | விழிப்பு |
| 26. | ஊடல் | - | கூடல் |
| 27. | எதிர்ப்பு | - | ஆதரவு |
| 28. | ஏகம் | - | அநேகம் |
| 29. | ஏற்றுமதி | - | இறக்குமதி |
| 30. | ஐயம் | - | தெளிவு |
| 31. | ஒடுக்கம் | - | விரிவு |
| 32. | கங்குல் | - | மங்குல் |
| 33. | கலக்கம் | - | தெளிவு |
| 34. | காய்தல் | - | உவத்தல் |
| 35. | காழ்ப்பு | - | நயப்பு |
| 36. | கிளர்ச்சி | - | அமைதி |
| 37. | குறில் | - | நெடில் |
| 38. | குன்று | - | குழி |
| 39. | கூட்டல் | - | கழித்தல் |
| 40. | கேண்மை | - | பகைமை |
| 41. | கைத்தல் | - | இனித்தல் |
| 42. | கொடுக்கல் | - | வாங்கல் |
| 43. | கோடை | - | மாரி |
| 44. | சண்டை | - | சமாதானம் |
| 45. | சாதகம் | - | பாதகம் |
| 46. | சிக்கனம் | - | இடாம்பீகம் |
| 47. | சுருக்கம் | - | பெருக்கம் |
| 48. | சூடு | - | குளிர் |
| 49. | செழுமை | - | வரட்சி |
| 50. | தொடக்கம் | - | முடிவு |

**பயிற்சி**

தரப்பட்டிருக்கும் எதிர்கருத்துச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை ஆக்குக.

## இலக்கணம்

### சொற்கள்

**பின்வருவனவற்றுள் சொற்கள் எவையென இனங்காண்போம்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| உயிர் | உல் | பழம் | ஏன் | ந்டவு | க் |
| னிக | அழகு | லைசி | வந்தான் | ப்டிப | தீ |
| குழஅ | அஉள | உடல் | போல. | வய் | கை |
| ர்யிஉ | கனி | சிலை | மௌவல் | ண்காம் | லீ |

சொற்களை இனங்கண்டிருப்பீர்கள்

உயிர், அழகு, உடல், கனி, பழம், கை, தீ

சிலை, ஏன், வந்தான், போல, மௌவல்

என்பன சொற்களாகும்

ஏனையவை வெறும் எழுத்துக் கூட்டங்களே, இவற்றுக்குப் பொருள் கிடையாது.

**ஆகவே**

**ஒன்றோ ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களோ இணைந்து பொருள் தருமாயின் அவை சொல் எனப்படும்.**

தமிழில் சொற்களை, பல வகையாக இலக்கணக்காரர் பிரித்து நோக்குகின்றனர்

(அ) பகுபதம், பகாப்பதம்

(ஆ) இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல்

(இ) பெயர்ச் சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல்.

(ஈ) இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி

(உ) இலக்கணமுடையன, இலக்கணப்போலி, மருஉ

மொழியியலாளர்கள் தற்காலத் தமிழ் மொழியின் அமைப்பைப் புரிந்து கொள்ளும் வகையில் சொற்களின் இலக்கணத் தொழிற்பாட்டை ஒட்டிச் சொற்களை

1. பெயர்ச்சொல்
2. வினைச்சொல்
3. இடைச்சொல்
4. பெயரடை
5. வினையடை

எனப்பிரித்து நோக்குகின்றனர்.

**பின்வரும் சொற்களை அவதானித்து வகைப்படுத்த முயற்சிப்போம்.**

| | | | | |
|---|---|---|---|---|
| மரம் | வா | மலர் | போல | கவிஞன் |
| நில் | விட | நீதிபதி | நனி | ஆகவே |
| தவ | ஆனால் | கூர் | ஓடு | படி |
| கழி | மற்று | சால | விழு | கலைஞன் |

சொற்களின் பொருள் உணர்ந்து கீழ்வரும் அட்டவணையை நிரப்புவோம். (பயிற்சி கொப்பியில் நிரப்புங்கள்) ஏற்கனவே தரம் 7 ல் இவைபற்றி கற்றுள்ளீர்கள். அவற்றை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

| பெயர்ச்சொல் | வினைச்சொல் | இடைச்சொல் | உரிச்சொல் |
|---|---|---|---|
| | | | |

**எனவே,**

தமிழில் சொற்களை நான்கு வகைப்படுத்தலாம் என்பதை தற்போது நீங்கள் அறிந்திருப்பீர்கள். அடுத்த அலகில் சொற்களின் வகைகளைக் கற்போம்.